LIBRARY
16 APR 1962
LEGISLATURE, MA

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, the 28th September 1961.

The House met in the Assembly Chamber, *Fort St. George*, at half-past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Ban on export of Jaggery

***S.N.Q. 19.—SRI V. K. KOTHANDARAMAN :** கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெல்லம் ஏற்றுமதியைத் தடை செய்ததன் விளைவாக, கரும்பு பயிரிடுவோர்களும், வியாபாரிகளும் கஷ்டப்படுவது அரசினருக்குத் தெரியுமா ?

(இ) ஆமென்றால், இத்துன்பத்தைப் போக்க அரசினர் என்ன நடவடிக்கை எடுத்துள்ளனர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is no ban on the export of jaggery from India. But there is lack of demand from countries which were normally consuming our jaggery.

(*b*) The question of finding suitable markets for our jaggery is engaging the attention of the Government and every effort will be made in this regard. The prices of cane jaggery at important centres which were showing a decline from January 1961 have generally registered a rising trend since May 1961.

SRI M. KALYANASUNDARAM : Sir, Question No. 1872 given notice of by the hon. Member, Sri S. M. Annamalai, also relates to the same subject and it may also be taken up now.

DEPUTY SPEAKER : Yes.

Gur (fall in price)

***1872Q.—SRI M. KALYANASUNDARAM (on behalf of SRI S. M. ANNAMALAI) :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வெல்லத்தின் விலை குறைந்திருப்பதால் விவசாயிகள் பாதிக்கப் பட்டிருப்பது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) அப்படியானால், அதைப்போக்க சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) There is no ban on the export of jaggery from India. But there is lack of demand from countries which were normally consuuming our jaggery. Every effort is being made to find markets for the jaggery produced in South India.

[28th September 1961

SRI V. K. KOTHANDARAMAN : இந்தக் குறையைப் போக்கு வதற்காக வேண்டி அதற்கான நடவடிக்கை என்ன எடுத்திருக்கிறார்கள்? மத்திய சர்க்கார் மூலமாக புதிய ஏற்பாடு செய்யப்பட்டதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் குறையைப் போக்குவதற்காக ஒரு ஏற்பாடு புதிதாக சர்க்கரை ஆலைகள் அமைப்பது. மற்றபடி வெளிநாடுகளில் யாரும் வாங்குவதில்லை. மற்ற நாடுகள் வாங்கமாட்டோம் என்றால் அவர்களை நிர்ப்பந்திக்க முடியாது. இருந் தாலும் எக்ஸ்போர்ட் ப்ரொமோஷன் கவுன்சில் மூலமாக எப்படி நம்முடைய ஏற்றுமதியை பெருக்க முடியும் என்பது பற்றி மத்திய சர்க்கா ரிடம் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

SRI M. KALYANASUNDARAM : வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி குறைந்திருப்பதற்குக் காரணம் வெளிநாடுகள் வாங்கவில்லை என்பது தான் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி குறைந் திருந்தாலும் அந்த அளவிற்காவது ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் அதற்கு முன்பு எவ்வளவு ஏற்றுமதி செய்துகொண்டிருந்தார்களோ, அந்த அடிப் படையில் விகிதாச்சாரம் செய்து பிரித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. ஆனால் ஏற்றுமதி அடியோடு நிறுத்தப்பட் டிருக்கிற நிலையில், வெல்லம் எல்லாம் நம் நாட்டிலேயே விற்கப்பட வேண்டிய நிலை இருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : புதிதாக சர்க்கரை ஆலை ஏற்படுத்து வதுதான் இந்தக் குறையைப் போக்குவதற்கான வழி என்று சொல்ல முடியாது. உடனடியாக விவசாயிகளுடைய, வியாபாரிகளுடைய குறைபாடுகளை நீக்கவேண்டுமானால், மற்ற எந்த நாடுகளில் வாவழைத்துக் கொண்டிருந்தார்களோ அவர்களிடத்தில் மத்திய சர்க்கார் மூலமாக பேச்சு வார்த்தைகள் நடத்தி, அனுப்புவதற்கான முறையில் எவ்வளவு சீக்கிரம் செய்யமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எத்தனை வருஷம் சென்றாலும் இது தீராது. இப்போது 1960–61-ல் ஒரு லட்சத்து 27 ஆயிரம் ஏக்கரில் கரும்பு பயிரிடப்படுகிறது. ஆனால் சர்க்கரையாக ஆக்கப்படுவது 31 சதம் தான். அதாவது 41 ஆயிரம் ஏக்கரில் உற்பத்தியாகும் கரும்பு அளவு சர்க்கரை உற்பத்தியாகிறது. மூன்றில் இரண்டு பங்கு வெல்லமாகத் தான் காய்ச்சப்படுகிறது. மற்ற நாடுகளில் வாங்குவதில்லையென்றால், வாங்குவது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. இருந்தாலும் இதிலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. வேறு சில ராஜ்யங்களிலும் கரும்பு பயிரிடுவது ரொம்ப ஏராளமாக அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது.

SRI T. KARIA GOUNDAR : மாகாணத்திற்கு மாகாணம் ஏதாவது ஏற்றுமதிக் கட்டுப்பாடு உண்டா ? சிலோனுக்கு ஏற்றுமதி செய்வது அடியோடு நிறுத்தப்பட்டிருப்பதால், இதன் விலை குறைந்திருப்பது சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறதா ? அப்படி யானால் மத்திய சர்க்காரிடம் இந்த விஷயமாகப் பேசி சிலோன் ஏற்றுமதி கட்டுப்பாட்டைத் தளர்த்த அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஏற்றுமதியிலே கட்டுப்பாடு இல்லை. இறக்குமதியிலேதான் கட்டுப்பாடு இருக்கிறது. இதைத் தளர்த்தவேண்டியது அந்த அரசாங்கமே தவிர நம்முடைய அரசாங்கம் அல்ல. ராஜ்யங்களுக்கெல்லாம் கோட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. ராஜ்யங்களையும் கலந்தாலோசிக்கப்படுகிறது. அந்த வகையிலே ஏற்றுமதி எங்கெங்கு இருக்கிறதோ அந்த அளவிற்கு ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஒரு கோட்டா கிடைக்கிறது.

28th September 1961]

SRI S. RAMALINGA PADAYACHI : வெல்ல உற்பத்தி பண்ணுவதற்கு மூட்டை ஒன்றுக்கு மொத்த உற்பத்திச் செலவு 18 ரூபாயிலிருந்து 20 ரூபாய் வரை ஆகிறது. ஆனால் விலை 15 ரூபாயிலிருந்து 20 ரூபாய் தான் விற்கிறது. இது ரொம்ப குறைவாக இருக்கிறது. இதனால் கரும்பு விவசாயம் செய்கிறவர்கள் ரொம்பவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே வெளிநாடுகளிடம் ஏதாவது ஒரு உடன்பாடு செய்துகொண்டுதான் வெளிநாடுகளுக்கு அனுப்பியிருந்த ரேட்டை விட சற்று கம்மியாக இருந்தாலும் வெளிநாடுகளுக்கு அதிகமான அளவிற்கு ஏற்றுமதி செய்து அவர்கள் கஷ்டத்தை நீக்க வழிவகை செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது கவனிக்கப்பட்டு வருகிறதென்று நான் முன்னமே சொன்னேன். மற்ற நாடுகளில் வாங்கச் செய்வது சுலபமானதல்ல என்றும் சொன்னேன். நம் நாட்டில் இதை அதிகமாக உட்கொண்டால் இந்தப் பிரச்னை ஓரளவு குறையும்.

SRI M. KALYANASUNDARAM : நம் நாட்டிலே உடகொள்ளுவதற்கும் சரி, வெளிநாடுகளில் ஏற்றுமதி செய்வதற்கும் சரி வெள்ளைச் சர்க்கரையாக மாற்றப்படுமானால் ஓரளவு சாத்தியம் எற்படலாம். தவிர வெல்லத்திற்குப் பதிலாக விவசாயிகளே நேரடியாக வெள்ளைச் சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய இயந்திரங்களை சப்சிடைஸ் விலைக்கு கிராமப்புறங்களில் வினியோகம் செய்வதற்காவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறு குறிப்பிட்ட பிரேரேபணை ஒன்றும் இல்லை. இருந்தாலும் யாராவது இதைப் பற்றி கோரிக்கை தெரிவித்தால் இது கவனிக்கப்பட்டு எந்த அளவு நிறைவேற்றப்படுமோ, எந்த வசதி செய்யமுடியுமோ அவைகளெல்லாம் கவனிக்கப்படும்.

SRI K. R. NALLASIVAM : வெல்லத்தையும் அஸ்கா சர்க்கரை ஆக்கும் முறையிருக்கிறது. என் அதற்கென்று இந்த மாநிலம் பூராவும் சேர்த்து ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்தி அதன் மூலம் இந்தக் குறை பாட்டைத் தவிர்க்க முடியாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு முன்பு நான் விடை அளித்ததும் இதே மாதிரி கேள்விக்குத்தான். இது அவ்வளவு சாத்தியம் என்று சொல்லமுடியாது.

SRI A. A. RASHEED : May I know whether the Hon. Minister considers the present production as over-production and if so, whether there is any proposal to restrict the production of jaggery?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, regarding sugarcane I cannot say that there is overproduction so far as this State is concerned. There is overproduction in certain other States. Therefore, I am totally against control of sugarcane or cultivation of other crops by ryots.

SRI P. G. MANICKAM : வெல்லம், சர்க்கரை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது அறவே தடுக்கப்பட்டிருக்கிறதென்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது ? அவ்வாறு தடை செய்யப்பட்டதற்கான காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முக்கியமாக சிலோனுக்கும், மலேயாவிற்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இப்போது அவர்கள் வேண்டாமென்று சொல்கிறார்கள். நாம் ஒன்றும் தடுக்கவில்லை. அவர்கள் கேட்டால்தான் கொடுக்கலாம். நம் நாட்டில் இறக்குமதி செய்யும்போது அவர்கள் கொடுப்பதையெல்லாம் எடுத்துக்கொள்வதில்லை. எது

வேண்டுமோ அதைத்தான் எடுத்துக்கொள்கிறேம். இதுமாதிரி மற்ற நாடு களுக்கு வெல்லம் வேண்டுமென்றல் அனுப்புகிறேம். வேண்டாமென் றல் அவர்கள் தலையிலே கட்டமுடியாது.

SRI R. SWAMINATHA MERKONDAR : ஸார், தற்போது வெல் லத்தின் விலை குறைந்திருக்கிறது. அது அதிகமாக நமது நாட்டிலே கரும்பு சாகுபடி செய்வதால், ஓரளவு குறைந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். ஆதலாலே, கரும்பு உற்பத்தி செய்வதை ஓரளவு கட்டுப்படுத்தி, ஒருவர் இத்தனை ஏக்கர் தான் உற்பத்தி செய்யலாம் என்று கட்டுப்படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் முன்பே சென்னேன், நம் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் உற்பத்தி அதிகம் என்று சொல்வதற்கில்லை என்று. ரொம்பக் குறைவாகவே உற்பத்தி ஆகிறது. ஆகவே இதைத் தடுக்க வேண்டிய நிர்ப்பந்தமே இல்லை.

Unemployment

* 1830 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether any survey has been conducted to find out the number of unemployed persons among the educated as well as the uneducated?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No Sir.

SRI N. K. PALANISAMI : வேலை இல்லாத்திண்டாட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களில் படித்தவர்கள் எத்தனை பேர்கள் என்பதை பரிசீலனை செய்து, எத்தனை பேருக்கு வேலை கொடுக்க முடியுமென்பதற்கு சர்க்கார் பாதுகாப்பளித்து, எத்தனை பேர்களிடையே வேலை இல்லாத் திண்டாட்டத்தை குறைக்க முடியுமென்று கணக்கெடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சில் ரிஜிஸ்தர் செய்து கொண்டிருப்பவர்களைப் பற்றி டெல்லியிலே ஒரு அட்ஹாக் கமிட்டி சர்வே நடத்தியது. அதன்படிப் பார்த்தால் மொத்தத்திலே எவ்வளவு பேர்கள் வேலை இல்லாமல் ரிஜிஸ்தர் செய்திருக்கிறர்கள் என்று பார்த்தால், 4-ல் ஒரு பங்கு தான் ரிஜிஸ்தர் செய்திருப்பதாகத் தெரிகிறது. 1961 பெப்ரவரி கடைசியில் 127,275 பேர்கள் ரிஜிஸ்டர் செய்திருப்பதால் மொத்தம் வேலை இல்லாதவர்கள் 5 லட்சம் என்று மதிப்பிட்டிருக்கிறர்கள். ஆனல் இதோடு புதிதாக வேலை இல்லாதவர்களும் வந்து சேருகிறர்கள். 1960 ஏப்ரல் 1-ம் தேதி மெட்ரிகுலேஷன், அதற்கு மேற்பட்ட பரீட்சை படித்தவர்களிடையே வேலை இல்லாது இருக்கிறவர்கள் எவ்வளவு பேர்கள் என்று பார்த்தால் 24,754 என்று இருக்கிறது.

Employment exchange.

* 1831 Q.—SRI K. VINAYAKAM (on behalf of SRI S. M. ANNAMALAI) : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் வேலை தேடித்தரும் அலுவலகத்தின் மூலமாக எத்தனை மாநில லோயர் டிவிஷன் குமாஸ்தாக்கள் (L.D.C.) மத்திய சர்க்கார் உத்தியோகத்திற்கு அனுப்பப்பட்டார்கள் ?

(இ) இதைக் குறித்து மத்திய சர்க்காரின் உத்தரவு வந்துள்ளதா ? அதன் விவரம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The number of persons sent by the Employment Exchanges for recruitment as lower division clerks in the Central Government Offices during the year 1960 was 6,690 (six thousand, six hundred and ninety).